



# மாண்புமிகு
# தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மா
# அவர்கள் அரசின்
# மூன்றாண்டு சாதனைகள்

## கோயம்புத்தூர் மாவட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

# அரசின் மூன்றாண்டு சாதனைகள்

## கோயம்புத்தூர் மாவட்டம்

சிறப்பு வெளியீடு எண். 42

இலவச வெளியீடு

# தமிழரசு

ஜூலை 2014

தொகுப்பு – கள விளம்பரப் பிரிவு

*வெளியிடுபவர் :*
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

## பதிப்புரை

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு" (குறள் 385)*

என்ற வள்ளுவனின் குறளுக்கிணங்க, ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையின் கீழ் மூன்றாண்டுகளில் முழுமையான வளர்ச்சியை கண்டோம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியினை அழகுற எடுத்துக்காட்டும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசு துறைகளின் சார்பில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் முழுமையாக தொகுக்கப்பட்டு, **"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அரசின் மூன்றாண்டு சாதனைகள் – கோயம்புத்தூர் மாவட்டம்"** எனும் தலைப்பில், எழில்மிகு கையேடாக செய்தி மக்கள் தொடர்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில், அமைதி! வளம்! வளர்ச்சி! பாதையில் வெற்றி நடை போடும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை படம் பிடித்துக்காட்டும் விளக்கக் கையேடாக இந்நூல் அமைந்துள்ளது.

இக்கையேட்டினை அனைவரும் படித்து பயன்பெற அன்புடன் விழைகிறேன்.

**மூ. இராசாராம்,** இஆப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# கோயம்புத்தூர் மாவட்டம்





*விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்*

**விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்**

❖ **9,81,410** குடும்ப அட்டைதாரர்களுக்கு, **4,43,044** மெட்ரிக் டன் விலையில்லா அரிசி.



*விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்*

- 101 நபர்களுக்கு ரூ.1,000 வீதம் மாதாந்திர உதவித் தொகை.

**உழவர் பெருவிழா**

- ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் 1,46,440 விவசாயிகள் பயன் அடையும் வகையில் இடுபொருட்கள்.

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்**

- 13,790 விவசாயிகளுக்கு ரூ.7.39 கோடி நிதியுதவி.

**அந்தியோதயா அன்னயோஜனா திட்டம்**

- 60,048 குடும்ப அட்டைதாரர்களுக்கு, 52,192 மெட்ரிக் டன் விலையில்லா அரிசி.

## விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்

❖ 10,572 குடும்பங்களுக்கு தலா 4 ஆடுகள் வீதம் ரூ.13.53 கோடி மதிப்பீட்டில் 42,288 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை 31,701 குட்டிகளை ஈன்றுள்ளன.

## விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம்

❖ 213 கிராமங்களில் உள்ள 4,27,305 இல்லத்தரசிகளுக்கு ரூ.182.51 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள்.



*விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம்*

## விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

❖ பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.129.16 கோடி மதிப்பீட்டில் 84,568 விலையில்லா மடிக்கணினிகள்.



விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

## விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

❖ 11ஆம் வகுப்பு பயிலும் 66,184 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.20.63 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.

## திருமண நிதியுதவியுடன் 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டம்

❖ 10ஆம் வகுப்பு படித்த 6,822 ஏழைப்பெண்களுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.17.06 கோடி திருமண நிதியுதவியும், ரூ.8..22 கோடி மதிப்பிலான 27.28 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.



*தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம்*

- 5,342 பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.26.71 கோடி திருமண நிதியுதவியும், ரூ.4.59 கோடி மதிப்பிலான 21.36 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

- 84,310 பயனாளிகளுக்கு ரூ.206 கோடி செலவில் மருத்துவ சிகிச்சை.

**சமூகப் பாதுகாப்புத் திட்டம்**

- 55,797 முதியோர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.200.86 கோடி 8,524 ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ஓய்வூதியமாக ரூ.30.69 கோடியும், 2,643 ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ஓய்வூதியமாக



*முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்*

ரூ.2.72 கோடியும், 50 வயதை கடந்த 754 திருமணமாகாத ஏழை மகளிருக்கு ஒய்வூதியமாக ரூ.2.72 கோடியும், 1,470 ஆதரவற்ற விதவைத் தாய்மார்களுக்கு ரூ.5.30 கோடி உதவித் தொகை.

### இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதியத் திட்டம்

❖ 14,442 விதவைத் தாய்மார்களுக்கு ரூ.51.99 கோடி ஓய்வூதியம்.

### இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்

❖ 1,388 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் ரூ.4.99 கோடி ஓய்வூதியம்.

**நலிந்தோர் நலத்திட்ட நிவாரண நிதியுதவித் திட்டம்**

❖ 366 பயனாளிகளுக்கு ரூ.36.60 இலட்சம் உதவித் தொகை.

**விரைவு பட்டா மாற்றம் செய்து தரும் புதியத் திட்டம்**

❖ 69,493 பட்டாக்கள் மாறுதல் செய்து தரப்பட்டுள்ளன.

**விபத்து நிவாரண உதவித் தொகைத் திட்டம்**

❖ 861 பயனாளிகளுக்கு விபத்து நிவாரண உதவித் தொகையாக ரூ.253.45 இலட்சம் வழங்கல்.

**இலங்கைத் தமிழர்களுக்கான உதவித் தொகை திட்டம்**

❖ முதியோர் மற்றும் விதவை ஓய்வூதியமாக 202 பயனாளிகளுக்கு ரூ.72.72 இலட்சம்.

**பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டு மூலம்
ஓய்வூதியம் வழங்கும் திட்டம்**

❖ 295 கிராமங்களில் உள்ள 26,139 ஓய்வூதியதாரர்களுக்கு பயோமெட்ரிக் அட்டை வழங்கப்பட்டு, வங்கி மூலம் ரூ.94.10 கோடி ஓய்வூதியம்.

❖ 184 கிராம நிருவாக அலுவலர்களுக்கு பிரிண்டர்களுடன் கூடிய மடிக்கணினி.

❖ திருக்கோயில் காணிக்கையாக வரப்பெற்ற 92 கால்நடைகள் ஒருகால பூஜை நிதியுதவி திட்டத்தின் கீழ் உள்ள கோயில் பூசாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில் அன்னதானத் திட்டம்**

❖ 24 திருக்கோயில்களில் நாள்தோறும் 2,434 பக்தர்களுக்கு அன்னதானம்.



முதியோர் ஓய்வூதியம்

**முன்னாள் படைவீரர்கள் நலத்துறை**

❖ முன்னாள் படைவீரர்கள் குடும்பங்களுக்குக் கல்வி உதவித் தொகை 184 நபர்களுக்கு ரூ.27.52 இலட்சம் மற்றும் வங்கிக்கடன் வட்டி மானிய நிதியுதவியாக 8 நபர்களுக்கு ரூ.1.85 இலட்சம்.

## மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

**சிறப்புப் பொது விநியோகத் திட்டம்**

❖ 9,21,306 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.186.35 கோடி மதிப்பிலான கோதுமை மாவு, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை மலிவு விலையில் வழங்கல்.

**ஒரு கிலோ சன்னரக அரிசி ரூ.20க்கு வழங்கும் திட்டம்**

❖ 25,380 குடும்பங்களுக்கு ரூ.1.01 கோடி மதிப்பீட்டிலான அரிசி.



*முன்னாள் படைவீரர்கள் குடும்ப நபர்களுக்கு கல்வி உதவித்தொகை*

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

❖ 47,284 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.11.59 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.

❖ பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் 140 நபர்களுக்கு ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் தையல் இயந்திரங்கள்.

❖ 172 நபர்களுக்கு ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லாச் சலவைப் பெட்டிகள்.

❖ 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 22 மாணவ, மாணவியர்களுக்கு தலைசிறந்த பள்ளியில் சேர்ந்து படிக்க ரூ.2.50 இலட்சம் நிதியுதவி.

❖ 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 36 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.72,000 மும், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 36 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1,44,000 மும் பரிசுத் தொகை.



*விலையில்லா மிதிவண்டிகள்*

❖ தந்தை பெரியார் விருதாக 48 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.36 இலட்சம் பரிசுத் தொகை.

❖ பேரறிஞர் அண்ணா விருதாக 48 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.36 இலட்சம் பரிசுத் தொகை.

❖ கிராமப்புர பெண்கல்வி ஊக்குவிப்புத் தொகையாக மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர்களுக்கு ரூ.61.53 இலட்சம், சிறுபான்மையினர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 1.84 கோடி கல்வி உதவித் தொகை.

❖ 211 நபர்களுக்கு ரூ.13,40,500 தனிநபர் தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய கடன்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

❖ 16,612 மாணவச் செல்வங்களுக்கு ரூ.5.08 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதி வண்டிகள்.

❖ 1,13,336 ஆதி திராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.64.35 கோடி கல்வி உதவித் தொகை.

❖ 5,472 மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகளும் 1,368 மாணவ, மாணவியர்களுக்கு பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும், எஸ்.புங்கம்பாளையத்தில் புதிதாக துவங்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவிடுதிகளில் தங்கிப் பயிலும் 50 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2,500 மதிப்பீட்டில் போர்வைகளும் வழங்கப்பட்டுள்ளன.

### மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தன்னிறைவுத் திட்டம்

❖ பொதுமக்களின் பங்களிப்புடன் ரூ.29.50 கோடி மதிப்பீட்டில் 294 பணிகள்.



*கல்வி உதவித்தொகை*

**முழு சுகாதாரத் திட்டம்**

❖ ரூ.21.06 இலட்சம் மதிப்பீட்டில் 117 பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் முழுமையான கழிப்பறைகள்.

**சிறப்புச் சாலைகள் திட்டம்**

❖ ரூ.752.96 இலட்சம் செலவில் 53.08 கிலோ மீட்டர் தூரம் சாலைப்பணிகள்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டம்**

❖ ரூ.85.52 கோடி மதிப்பீட்டில் ஏழை, எளிய குடும்பங்களுக்குச் சூரிய மின் சக்தியுடன் கூடிய 4,501 பசுமை வீடுகள்.




*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்
பசுமை வீடுகள் திட்டம்*

## தாய் திட்டம்

### தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

❖ 129 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 891 குக்கிராமங்களில் ரூ.38.93 கோடி மதிப்பீட்டில் 2,683 பணிகள்.

### இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

❖ 9,850 வீடுகள் ரூ.102.41 கோடி செலவில் கட்டித்தரப்பட்டது.

❖ ரூ.356.382 இலட்சம் மதிப்பீட்டில் 316 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைப்பு.

❖ ரூ.1 கோடி மதிப்பீட்டில் 25 ஆண்கள் சுகாதார வளாகங்கள்.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- ரூ.58.31 கோடி மதிப்பீட்டில் 1,493 பணிகள்.

## நபார்டு திட்டம்

- ரூ.4,084.34 இலட்சம் மதிப்பீட்டில், 188.679 கிலோ மீட்டர் நீளம் 67 பணிகளுக்கான கிராமப்புரச் சாலைகள்.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்



*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்*

- 3,35,056 குடும்பங்களில் 2,04,805 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 2,02,678 தனிநபர்களுக்கு வேலை அடையாள அட்டை வழங்கப்பட்டு, 1,50,05,110 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு ரூ.189.46 கோடி மதிப்பீட்டில் 6,848 பணிகள்.

**நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம்**

❖ ரூ.32.21 கோடி செலவில் 509 பணிகள்.

**13ஆவது நிதிக்குழு மானியத் திட்டம்**

❖ ரூ.1,095.43 இலட்சம் மதிப்பீட்டில் 112.937 கி.மீட்டர் நீளத்திற்கு 52 சாலைப் பணிகள்.

**பிளாஸ்டிக் சாலை**

❖ பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு ரூ.151.29 இலட்சம் செலவில் 16.39 கி.மீ. நீளத்திற்கு பிளாஸ்டிக் சாலை.

**சாண எரிவாயுத் திட்டம்**

❖ ரூ.8.72 இலட்சம் மானியத்துடன் 109 கலன்கள்.

**ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

❖ ரூ.657.36 இலட்சம் மதிப்பீட்டில் 729 பணிகள்.

❖ கோயம்புத்தூர் மாநகராட்சியில் 546.61 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.180.84 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு. ரூ.798 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகள்.

**ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்**

❖ ரூ.722.72 இலட்சம் மதிப்பீட்டில் 261 மழைநீர் வடிகால் பணிகள்.

### குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

- ❖ ரூ.161.75 இலட்சம் மதிப்பீட்டில் 74 சதவிகிதப் பணிகள் முடிவு.

## பேரூராட்சிகள்

- ❖ பேரூராட்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.82 இலட்சம் மதிப்பீட்டில் 36 கழிப்பிடங்கள்.
- ❖ தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.958.94 இலட்சம் மதிப்பீட்டில் 41 தார்சாலை பணிகள்
- ❖ பகுதி–2 மற்றும் அறிவிப்புகள் 2012–2013 திட்டத்தின் கீழ், ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் காரமடை, பள்ளபாளையம், செட்டிபாளையம் ஆகிய பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலக கட்டடங்கள்.

### ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்

- ❖ தார்சாலை பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணி ரூ.5,664.78 இலட்சம் செலவில் 205 பணிகள்.

## நபார்டு திட்டம்

### நகராட்சிகள் (பொள்ளாச்சி, மேட்டுபாளையம், வால்பாறை)

- ❖ ரூ.2,744.20 இலட்சம் செலவில் 87 தார்சாலைகள்.
- ❖ ரூ.545 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள்.
- ❖ ரூ.82 இலட்சம் செலவில் 6,440 மீட்டர் நீளப் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்சாலை.

- வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் 23 ஆழ்துளை கிணறு மற்றும் மினிபவர் பம்ப்.

**ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்**

- ரூ.12.40 கோடி செலவில் பல்வேறு பணிகள்.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையம்
(மகளிர் திட்டம்)**

- 2,66,308 உறுப்பினர்கள் கொண்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ரூ.13.76 கோடி தொகைசேமிப்பு.
- 2,053 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு சுழல்நிதிக் கடனாக ரூ.2.39 கோடியும், பொருளாதாரக் கடனாக 227 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.2.83 கோடி.
- 7,250 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.191 கோடி வங்கிகளின் மூலம் நேரடிக் கடன்.
- 151 ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.151 இலட்சம் கடனுதவியும், பெருங்கடனாக ரூ.279 இலட்சம் வழங்கல்.
- 1,220 இளைஞர்களுக்கு ரூ.29.50 இலட்சம் செலவில் தொழிற் மேம்பாட்டுப் பயிற்சி.

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

**குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் 2005**

- 16 பெண் குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தம்.

**பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்**

❖ 3,022 குடும்பங்களைச் சார்ந்த 6,044 பெண் குழந்தைகளுக்கு ரூ.10.57 கோடி.

**தொட்டில் குழந்தைத் திட்டம்**

❖ அரசுத் தொட்டிலில் போடப்பட்ட 18 ஆண் குழந்தைகள் மற்றும் 13 பெண் குழந்தைகளை அரசு எடுத்து வளர்த்து வருகிறது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

❖ 12 ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சி, நகராட்சி என மொத்தம் 1,292 பள்ளிகளில் 5 வயது முதல் 14 வயது வரை மொத்தம் 1,20,827 மாணவ, மாணவியர்கள் பயன்.

**10 வகை கலவை சாதங்கள்**

❖ 365 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.6.41 இலட்சம் செலவில் 10 வகையான சத்தான கலவை சாதங்கள்.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்**

❖ 1,483 முதன்மை மையங்களும் 205 குறு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

❖ நாளொன்றுக்கு 32,216 குழந்தைகளுக்கு, முன்பருவக் கல்வி மற்றும் மதிய உணவு.

❖ 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையுள்ள 45,596 குழந்தைகளுக்கு இணை உணவு.

- ❖ 10,956 இணை உணவு உண்ணும் கர்ப்பிணிகள் 9,464 பாலூட்டும் தாய்மார்கள் பயன்.
- ❖ 48,359 குழந்தைகளுக்கு ரூ.1.54 இலட்சம் மதிப்பீட்டில் முட்டைகள்.
- ❖ 540 வளர் இளம் பெண்களுக்கு தொழிற்பயிற்சி.
- ❖ பொள்ளாச்சி தெற்கு வட்டாரத்தில் 1,825 குழந்தைகளுக்கு மதிய உணவில் பல்வகை உணவு.

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

- ❖ மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்து கொண்ட 36 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகையாக ரூ.11.75 இலட்சம்.
- ❖ 7,834 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5.04 கோடி செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்.
- ❖ 38,822 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள்.
- ❖ 5,044 நபர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை அட்டைகள்.
- ❖ 406 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.48.37 இலட்சம் மதிப்பீட்டில் உதவி உபகரணங்கள்.
- ❖ கடுமையாக இயலாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தசைசிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 3,098 நபர்களுக்கு மாதம் தலா ரூ.1,000 வீதம் பராமரிப்பு உதவித் தொகை.




*மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம்*

## வேளாண்மைத்துறை

### விதைப்பெருக்குத் திட்டம்

❖ **92** மெட்ரிக் டன் சான்று நெல் விதைகள், **45** மெட்ரிக் டன் சிறுதானிய சான்று விதைகள் **170** மெட்ரிக் டன் பயறு வகைப் பயிர்களின் சான்று விதைகள், **204** மெட்ரிக் டன் எண்ணெய் வித்து பயிர்களின் சான்று விதைகள் விநியோகம்.

**விதை கிராமத் திட்டம்**

❖ 38,456 விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய விலையில் நெல், சிறு தானியங்கள், பயறு வகை பயிர்களின் சான்று விதைகள் மொத்தம் 225 மெட்ரிக் டன் வழங்கல்.

❖ தரமான சான்று விதைகள் உற்பத்தி பற்றிய 105 தொழில்நுட்ப பயிற்சிகள் ரூ.15.75 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்பட்டு 10,500 விவசாயிகள் பயன்.

**தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**

❖ ரூ.547 இலட்சம் செலவில் திருந்திய நெல் சாகுபடி முறைகள், பயறு வகைகள், தீவிர சிறுதானிய உற்பத்தித் திட்டம், அதிக விளைச்சல் பெற துல்லியப் பண்ணையம் அமைத்தல்.

❖ 13,993 விவசாயிகளுக்கு ரூ.4.52 கோடி வறட்சி நிவாரணத் தொகை.

**தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்**

❖ 2,119 விவசாயிகளுக்கு ரூ.545.822 இலட்சம் மானியத்தில் வேளாண்மை இயந்திரங்கள்/கருவிகள்.

**வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம்**

❖ 123 விவசாயிகளுக்கு டிராக்டர், பவர் டில்லர், ரோட்டவேட்டர் போன்ற இயந்திரங்கள், கருவிகள் ரூ.49.10 இலட்சம் மானியம்.

**மழைநீர் சேகரிப்பு மற்றும் மேலாண்மைத் திட்டம்**

❖ ரூ.16.94. இலட்சம் செலவில் 9 பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் கிராமக் குட்டைகள்.

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த கிராமப்புர இளைஞர்களுக்கு வேளாண் கருவிகளை இயக்குவதற்கான 6 மாத கால பயிற்சித் திட்டத்தின் கீழ் ரூ.14.24 இலட்சம் செலவில் பயிற்சி.

❖ 2,178 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.884.378 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள்.

## தோட்டக்கலைத்துறை

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

❖ உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மற்றும் நடவுச் செடிகள் ரூ.54.222 இலட்சம் மதிப்பீட்டில் 50 சதவிகித மானியத்தில் 1,920 விவசாயிகளுக்கு விநியோகம்.

**துல்லிய பண்ணையத் திட்டம்**

❖ 2,005 எக்டேர் பரப்பளவில் ரூ.460 இலட்சம் மதிப்பீட்டில் உயர் விளைச்சல் தரும் காய்கறி, வாழை சாகுபடி.

**சொட்டு நீர் பாசனத் திட்டம்**

❖ 29,533 எக்டேர் பரப்பளவில் ரூ.1,343 இலட்சம் செலவில் சொட்டுநீர் பாசனத் திட்டம்.



*வேளாண் உற்பத்திக்கான விருது*

**மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

❖ தோட்டக்கலைச் சார்ந்த பண்ணையம் அமைக்க ரூ.110 இலட்சம் செலவில் 296 எக்டேர் நிலம் சீர்செய்து ஆழ்க்குழாய் கிணறுகள், காய்கறி சாகுபடி செய்யும் வகையில் விதைகள், கன்றுகள், இடுபொருள்கள் வழங்கல்.

**தேசிய நுண்ணீர் பாசன இயக்கம்**

❖ தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும், ரூ.570

இலட்சம் மதிப்பீட்டில் 937 எக்டேர் பரப்பில் சொட்டு நீர் பாசனம்.

**தேசிய மூலிகை பயிர்கள் இயக்கம்**

- ரூ.1.536 இலட்சம் மதிப்பீட்டில் 18 எக்டேர் பரப்பளவில் மருந்து கூர்க்கன் சாகுபடிக்கென மானியம்.

**பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம்**

- ரூ.20.46 இலட்சம் மதிப்பீட்டில் 135.3 எக்டேர் பரப்பளவில் காய்கறி சாகுபடிக்கு மானியம்.

**தேசிய தோட்டக்கலை இயக்கம்**

- ரூ.449.973 இலட்சம் மதிப்பீட்டில் தோட்டக்கலை பரப்பு விரிவாக்கம் பசுமைக் குடில் அமைத்தல், மண்புழு உர கூடாரம், தேனீ வளர்ப்பு போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, 4,057 விவசாயிகள் பயன்.

**நீர் வளம், நில வளத் திட்டம்**

- ரூ.39.726 இலட்சம் மதிப்பீட்டில், தோட்டக்கலைப் பயிர்கள் 320 ஏக்கர் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டு, 330 விவசாயிகள் பயன்.

**நகர்ப்புர தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

- ரூ.14.995 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறி விதைகள் மற்றும் இடுபொருட்கள் அடங்கிய சிறு தலைகள் நடப்பாண்டில் விநியோகம் செய்யப்பட்டு 193 பயனாளிகள் பயன்.

# வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

## வேளாண் வணிகத் திட்டம்

- ரூ.2,463.360 இலட்சம் மதிப்பீட்டில் 15,976.533 மெ.டன் விளைப்பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு 531 நபர்களுக்கு ரூ.792.619 இலட்சம் பொருளீட்டுக் கடன்.
- 18 விற்பனைக்கூடப் பகுதிகளில் 3,75,374.516 மெ.டன் அளவுள்ள விளைப் பொருட்களுக்கு கட்டணத் தொகையாக ரூ.4,085.519 இலட்சம் வசூல்.
- ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் திப்பம்பட்டியில் தென்னை விவசாயிகள் பயன் பெறும் வகையில் இளநீர் வணிக வளாகம் கட்டடப் பணிகள்.

## பட்டு வளர்ச்சித்துறை

- 950 ஏக்கர் மல்பரி நடவு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 809.50 ஏக்கர் மல்பரி நடவு.
- வெண்பட்டு முட்டைகள் அறுவடை செய்யப்பட்டு, 4.20 இலட்சம் கிலோகிராம் வெண்பட்டு கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் கிரியா ஊக்கத் திட்டத்தின் கீழ் புதிதாக மல்பரி நடவு செய்துள்ள விவசாயிகளுக்கு ரூ.29.46 இலட்சம் மல்பரி நடவு ஊக்க உதவித் தொகை.



*விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம்*

❖ தனிப்புழு வளர்ப்பு மனை அமைத்து 31 பட்டு விவசாயிகளுக்கு மானியத் தொகையாக ரூ.23.21 இலட்சம் நிதியுதவி.

❖ சொட்டுநீர் பாசனம் அமைத்ததற்காக ரூ.70.29 இலட்சம் மானியம்.

## கால்நடை பராமரிப்புத்துறை

### தீவனப் பயிர்த்திட்டம்

❖ 3,500 ஏக்கர் நிலப்பரப்பில் தீவனப் பயிர் சாகுபடிக்காக 100 சதவிகித மானியத்தில் ரூ.409 இலட்சம் ஒதுக்கீடு.

❖ 17 கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.245.68 இலட்சம் மதிப்பீட்டில் 17 புதியக் கட்டடங்கள்.

❖ ரூ.315 இலட்சம் மதிப்பீட்டில் 55 கால்நடை மருந்தகங்கள்.

**தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**

❖ ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் 3 கால்நடை மருந்தகங்களுக்கானக் கட்டடப் பணிகள்.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்**

❖ 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த குக்கிராமங்களில் உள்ள கால்நடைகள் பயன்பெறும் வண்ணம் நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கப் பணிகளுக்காக ரூ.7.56 இலட்சம் மதிப்பீட்டில் 180 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள்.

**வறட்சி மேலாண்மைத் திட்டம்**

❖ 50 சதவிகித மானியத்தில் கால்நடைகளுக்கு குறைவில்லா தீவனம் வழங்கும் பொருட்டு, 1,600 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.1.10 கோடி ஒதுக்கீட்டில், 1,681 பயனாளிகள் மூலம் தீவன சோளப்பயிர் விளைவிக்கப்பட்டு, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஏனைய பயனாளிகளுக்கு 50 சதவிகித மானியம் வழங்கல்.

**வனத்துறை**

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 5,21,625 மரக்கன்றுகள்




*விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம்*

நடவு செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**கூட்டுறவுத்துறை**

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்ட மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையம் வாயிலாக 810 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது.

❖ 63,698 விவசாயிகளுக்கு ரூ.428.85 கோடி குறுகிய காலப் பயிர்க்கடனும் 1,278 ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.10.21 கோடி பயிர்க்கடனும், 5,738

விவசாயிகளுக்கு ரூ.44.69 கோடி முதலீட்டுக் கடனும் வேளாண் விளைப்பொருட்கள் ஈட்டு கடனாக 1,043 விவசாயிகளுக்கு ரூ.16.38 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- ❖ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 8,47,012 விவசாயிகளுக்கு ரூ.4,218.07 கோடி நகைக்கடன், 211 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.33 கோடி, சிறுபான்மையினர் 478 நபர்களுக்கு ரூ.2.62 கோடி என பல்வேறு கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை சேமிக்க ஏதுவாக நபார்டு வங்கி நிதியுதவியுடன் தலா ரூ.8 இலட்சம் மதிப்பில் 33 ஊரகக் கிடங்குகள் ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

- ❖ கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் 10 இடங்களில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளை 24.02.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

- ❖ கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்குப் புதிதாக பாப்பநாயக்கன்பட்டி, சோமனூர், கணபதி மற்றும் இடையர்பாளையம் ஆகிய 4 கிளைகளை 20.06.2013 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

- ❖ கோயம்புத்தூர் மாவட்டத்தில் 33 இடங்களில் தலா 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் ரூ.2.64 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

### மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு

❖ மாவட்டத்தில் எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட 18 நபர்களுக்கு தாட்கோ உதவித் தொகையும், 85 நபர்களுக்கு விதவைகள் உதவித் தொகையும், 275 நபர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டையும், உலக எய்ட்ஸ் தினத்தன்று 27 குழந்தைகளுக்கு ரூ.1.05 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி மற்றும் மருத்துவ உதவித் தொகை வழங்கல்.

### பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறை

❖ 47 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.7.39 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள்.

### டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

❖ 60,405 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.55.38 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### பள்ளி சிறார் கண்ணொளிக் காப்போம் திட்டம்

❖ 6 மற்றும் 7ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு, 2,447 மாணவர்களுக்கு கண் கண்ணாடிகளும், பல் பாதுகாப்புத் திட்டத்தில் 81,298 குழந்தைகளுக்கு பல் சிகிச்சை.

### பெண்கள் நலத்திட்டம்

❖ 2,976 நபர்களுக்கு கருப்பை வாய் புற்றுநோயும், 1,558 நபர்களுக்கு மார்பக புற்றுநோயும், கண்டறியப்பட்டு




*விலையில்லா நாப்கின் வழங்கும் திட்டம்*

தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பிறவி குறைபாடுடைய 50 ஆண், 82 பெண் குழந்தைகள் கணக்கெடுக்கப்பட்டுச் சிகிச்சை.

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

- ❖ கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை சார்பில் 41.35 இலட்சம் நபர்களுக்கு சிகிச்சை.

- ❖ டெங்கு காய்ச்சல் பரவிய காலத்தில் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு, மலைவேம்புச் சாறு, ஆகியவை புற மற்றும் உள் நோயாளிகள் 4,45,571 நபர்களுக்கு வழங்கப்பட்டது.



*கல்வி உதவித் தொகை*

**பள்ளிக் கல்வித்துறை**

❖ 36,735 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.56.47 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினிகள்.

❖ 8,68,575 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள். 7,64,156 மாணவ, மாணவியர்களுக்கு பாடக்குறிப்பேடுகள்.

❖ 66,184 மாணவ, மாணவியர்களுக்கு ரூ,20.63 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.

❖ 6 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் 3,89,890 மாணவ, மாணவியர்களுக்கு தலா 4 செட் வீதம் விலையில்லா வண்ணச் சீருடைகள்.

- ❖ வருவாய் ஈட்டும் தாய், தந்தையர் விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அவர்தம் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை ரூ.50,000 வழங்கும் திட்டத்தின் கீழ், 208 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.04 கோடி வழங்கப்பட்டுள்ளது. 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை 39 மாணவக் கண்மணிகள் பெற்று சாதனைப் பயடைந்துள்ளனர். மேலும் பன்னிரெண்டாம் வகுப்பில் 92.95 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

- ❖ 6 முதல் 12ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் 8,68,575 விலையில்லா பாடநூல்கள்.

- ❖ 6 முதல் 12ஆம் வகுப்பு பயிலும் 4,64,983 மாணவ, மாணவியர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டைகள்.

- ❖ 6,7,8ஆம் வகுப்பு பயின்று வரும் 3,89,890 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள்.

- ❖ 6 முதல் 10ஆம் வகுப்பு பயின்ற 2,89,004 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா வரைகலைப்பெட்டி.

- ❖ 1 முதல் 12ஆம் வகுப்பு பயின்ற 5,58,612 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா புத்தகப் பை.

- ❖ 1 முதல் 10ஆம் வகுப்பு பயின்ற 4,78,923 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா காலணிகள்.

❖ 1 முதல் 2 ஆம் வகுப்பு பயின்ற 1,12,605 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா வண்ணப் பென்சில்கள்.

❖ 3 முதல் 5 ஆம் வகுப்பு பயின்ற 67,753 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா கிரையான்கள்.

❖ 3 ஆண்டுகளில் 3 துவக்கப்பள்ளிகள் புதிதாக தொடங்கப்பட்டு, 2 துவக்கப்பள்ளிகள் நடுநிலைப்




*மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள்,*
*பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள்*

பள்ளிகளாகவும், 13 நடுநிலைப்பள்ளிகள் உயர் நிலைப்பள்ளிகளாகவும், 13 உயர் நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்வு.

❖ மாவட்ட மைய நூலகத்தில் ரூ.50 இலட்சம் செலவில் மாற்றுத்திறனாளிளுக்கு பிரிவும், ரூ.10 இலட்சம்

செலவில் குழந்தைகள் பிரிவு ஆகியவற்றை 22.02.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

**அனைவருக்கும் கல்வி இயக்கம்**

❖ ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் தயாரிப்பதற்காக, ஆசிரியர் மானியம் ரூ.500 வீதம் ரூ.57.21 இலட்சம்.

❖ பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற குழந்தைகள் கல்வி பயில இதுவரை ரூ.111.50 இலட்சம்.

❖ பள்ளிக்குத் தேவையானப் பள்ளி தளவாடப் பொருட்கள் வாங்குவதற்கானப் பள்ளி மானியம் (1 முதல் 5 வகுப்புகள்) 1,839 பள்ளிகளுக்கு தலா ரூ.5,000 வீதம் ரூ.275.85 இலட்சங்கள் (6 முதல் 8 வகுப்புகள் வரை) 802 பள்ளிகளுக்கு தலா ரூ.7,000 வீதம் ரூ.168.7 இலட்சங்கள்.

❖ கட்டுமானப் பணிகளுக்கென்று ரூ.26.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**குடிசை மாற்று வாரியம்**

❖ ரூ.3,014.10 இலட்சம் மதிப்பிட்டில் 900 அடுக்கு மாடிக் குடியிருப்புகள்.

❖ நகர்ப்புர குடிசைப் பகுதி, சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டத்தில் 2,014 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.90.52 இலட்சம் மதிப்பீட்டில் குடிசைப் பகுதிகள்

நடைபாதை, சாலைவசதி மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் அமைத்தல் போன்ற அடிப்படைப் பணிகள் .

❖ உக்கடம், அண்ணாநகர், மலைநகர், கீரணத்தம், மலுமிச்சம்பட்டி ஆகிய பகுதிகளில் ரூ.294.59 கோடி மதிப்பீட்டில் 5,744 அடுக்குமாடி குடியிருப்புகள்.

❖ கோயம்புத்தூர் அம்மன் குளம் பகுதியில் 792 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.27.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 23.12.2013 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட தொழில் மையம்**

❖ மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 20,353 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தொழில் முனைவோர் ஒப்புகைச் சான்று. 3,848 பொதுப் பிரிவினருக்கும் 263 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் புதிய தொழில் தொடங்குவதற்கு அனுமதி. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 416 இளைஞர்களுக்கு ரூ.10.75 கோடி கடனுதவியும் ரூ.161.32 இலட்சம் மானியம்.

❖ குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலதன மானியமாக ரூ.605.71 இலட்சமும், மின் மானியமாக ரூ.75.22 இலட்சமும், மின்னாக்கி மானியமாக ரூ.177.63 இலட்சமும், மதிப்புக் கூட்டு வரி மானியமாக ரூ.63.82 இலட்சம் வழங்கி தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பு.



*பணி நியமன ஆணை*

**புதிய தொழில் முனைவோர் மற்றும்
தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்**

❖ 73 நபர்களுக்கு ரூ.3,821.91 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.820.71 இலட்சம் மானியமாக வழங்க முடிவு செய்யப்பட்டு, இதுவரை 49 நபர்களுக்கு ரூ.2,582.21 இலட்சம் வங்கிகளால் கடன் தொகை வழங்கப்பட்டு, 45 நபர்களுக்கு ரூ.372.51 இலட்சம் மானியம்.

**வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம்**

❖ வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்து 5 ஆண்டுகள் முடிவுற்ற 1,104 இளைஞர்களுக்கு ரூ.83.52 இலட்சம் உதவித் தொகை.




*புதிய பேருந்துகள் துவக்கம்*

- ❖ வேலைவாய்ப்புத்துறையின் மூலம் 5 பார்வையற்றவர் களுக்கும், 164 அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும், 1,056 தாழ்த்தப்பட்டோருக்கு மற்றும் 1,740 இதர பிரிவினருக்கும் பணி நியமனம் செய்திட பரிந்துரை செய்து வேலைவாய்ப்பு.

**அமைப்பு சாராத் தொழிலாளர்கள்**
**சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம்**

- ❖ கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் 1,399 நபர்களுக்கு ரூ.3.74 கோடி மதிப்பிலான கல்வி, மகப்பேறு நிதியுதவியும், இயற்கை மரண உதவித்தொகையும், திருமண நிதியுதவியும், கண் கண்ணாடிக்கான உதவித் தொகையும், ஓய்வூதியத்தொகையும் வழங்கல்.

- ❖ அமைப்பு சாராத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 36,753 நபர்களுக்கு ரூ.7.11 கோடி மதிப்பீட்டில்

கல்வி, மகப்பேறு, திருமண நிதியுதவி, இயற்கை மரண உதவி, கண்கண்ணாடிக்கான உதவித் தொகை, ஒய்வூதியத் தொகை, விபத்து மரண உதவித் தொகை, விபத்து ஊன உதவித் தொகை வழங்கல்.

**சிறுசேமிப்புத்துறை**

❖ சிறுசேமிப்பு மொத்த வசூல் தொகை ரூ.658.1 கோடி திரட்டப்பட்டுள்ளது. மகளிர் முகவர்களுக்கு சிறுசேமிப்புத் திட்டத்தில் முதலீடு திரட்டியமைக்கு ஊக்கத்தொகை ரூ.2.14 கோடி.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

❖ ரூ.2,091.87 இலட்சம் மதிப்பீட்டில் 332 குடிநீர்த் திட்டப் பணிகள்.

❖ ரூ.95.45 இலட்சம் மதிப்பீட்டில், 12 ஊராட்சி ஒன்றியங்களில் 51 பள்ளிகள், 168 அங்கன்வாடி மையங்கள், 2 மாணவ–மாணவியர் விடுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகள்.

❖ குடிநீர் ஆதாரங்களைச் செறிவூட்டுவதற்காக 31 தடுப்பணைகள், மற்றும் 80 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ரூ.394.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 113 பணிகளுக்காக ரூ.2,151.41 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

## தேக்கம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டம்

- ரூ.301 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டு 19.02.2014 இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, தொண்டாமுத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.114.25 கோடியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்

- ரூ.22.75 கோடி மதிப்பீட்டில் அன்னூரில் இரண்டும், சரவணம்பட்டியில் ஒன்றும், என மொத்தம் 3 துணை மின் நிலையங்களும், நெகமத்தில் ரூ. 565 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு துணை மின் நிலையமும் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

## தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்

- ரூ.76.20 கோடி மதிப்பீட்டில் 464 புதிய பேருந்துகள்.
- 5,11,293 பள்ளி, கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி மற்றும் பாலிடெக்னிக் மாணவ, மாணவியர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை அட்டை.
- 1,14,727 சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் அவர்களின் வாரிசுகள் கண் பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு இலவசப் பேருந்து பயண அட்டை.

- ❖ கோயம்புத்தூர் சரகத்தில் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம் தரம் உயர்த்தப்பட்டு இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகமாகவும், கோவை (மேற்கு) புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், வால்பாறையில் புதிதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.02.2014 அன்று தொடங்கி வைத்தார்கள்.

- ❖ சூலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் 20.6.2013 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

### கலை பண்பாட்டுத்துறை

- ❖ 606 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள், விருதுகள், நலவாரியத்தின் மூலம் 25 பயனாளிகளுக்கு ரூ.65,490 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்.

- ❖ இசைப்பள்ளியில் பயின்று வரும் 101 மாணவர்களுக்கு ரூ. 4 இலட்சம் உதவித் தொகை.

- ❖ மலுமிச்சம்பட்டியில் ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் இசைக் கல்லூரிக்கு புதிய கட்டடம்.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

- ❖ 12 வகையான விளையாட்டுப் போட்டிகள் ரூ.77 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு 1 இலட்சம் பயனாளிகள் பயன்.

- ❖ விளையாட்டு விடுதி துவக்குவதற்கு தொடரா செலவினமாக ரூ.60 இலட்சம் மற்றும் விடுதி




*காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது*

இயக்கத்திற்கு ரூ.23 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ ரூ.1.02 கோடி மதிப்பீட்டில் நேரு விளையாட்டு அரங்கில் 30 மீட்டர் உயர் கோபுர மின் விளக்கு.

**நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்**

❖ ரூ.1,724.17 இலட்சம் செலவில் 10 பாலங்கள், சாலைப் பணிகள், சிறுபாலப் பணிகள்.

❖ ரூ.3,213.56 இலட்சம் செலவில் 112.67 கி.மீ. சாலைகள்.

**நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு**

❖ ரூ.25,501.80 இலட்சம் செலவில் 751.288 கி.மீ. சாலைகள்.

❖ ஈச்சனாரி இரயில்வே மேம்பாலம் ரூ.13 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 11.11.2013 இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

❖ கோயம்புத்தூர் சுந்தராபுரம் – மதுக்கரை இரயில்வே மேம்பாலம் ரூ.15.12 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 19.06.2012 இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

❖ பொள்ளாச்சி – வால்பாறை சாலையில் இரயில்வே மேம்பாலம் ரூ.14.02 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 09.10.2012 இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

❖ சூலூர் – நீலாம்பூர் சாலையில் இரயில்வே மேம்பாலம் ரூ.11.16 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 20.06.2013 இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

❖ சிந்தாமணிபுதூர் – அத்தப்பக்கவுண்டன்புதூர் சாலையில் இரயில்வே மேம்பாலம் ரூ.21.10 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 11.11.2013 இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

❖ காமநாயக்கன்பாளையம் – அன்னூர் சாலையில் இரயில்வே மேம்பாலம் ரூ.15.88 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு 24.02.2014 இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### செய்தி மக்கள் தொடர்புத்துறை

❖ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் 24 பத்திரிகையாளர்கள் வசித்து வருகின்றனர்.

### பத்திரிக்கையாளர் ஓய்வூதியத் திட்டம்

❖ 2 நபர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம்.

❖ செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் கேரள மாநிலம், வைக்கம் தந்தை பெரியார் நினைவகம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிப்பு.

❖ 1 நபருக்கு பத்திரிக்கையாளர் குடும்ப ஓய்வூதியம்.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

❖ தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் ரூ.783.39 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 13 கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 19.02.2014 அன்று திறந்து வைத்து ரூ.1121.20 இலட்சம் மதிப்பீட்டில் 18 கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

### பத்திரப்பதிவுத் துறை

❖ இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.75 இலட்சம்மதிப்பீட்டில்புதியகட்டடங்கள்கட்டப்பட்டுள்ளது. நான்கு சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள்.




*அம்மா உணவகங்கள்*

